அ.வ.எண்: 44/2021 நாள்: 29.01.2026
வா.சா.2– பழனியப்பன்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

**1. நான் என்ன பரிகாரம் கேட்டு தாவா வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் வாரிசு சான்றிதழ் வழங்கக் கோரி தாவா வழக்கை தாக்கல் செய்தேன். 2 முதல் 7 வாதிகள் என் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். மீனாட்சி என் தாயார் ஆவார். தாவா வழக்கு தாக்கல் செய்ததற்கு முன்பே என் தாயார் இறந்து விட்டார் என்றால் சரிதான். 13.01.2021 அன்று இறந்தார். என் தகப்பனார் பெயர் காளியப்பன் ஆகும். ரத்தினம் என்பது என்னுடைய 4வது அண்ணன் ஆவார். மேற்படி ரத்தினம் என்பவருக்கு எத்தனை வாரிசுகள் உள்ளனர் என்றால் அவரது மனைவி மற்றும் 1 மகன் மற்றும் 1 மகள் உள்ளனர். மேற்படி ரத்தினத்தின் வாரிசுகளை தாவா வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு என்ன உரிமை உள்ளதோ அதே போல் எனது சகோதரர் ரத்தினத்தின் வாரிசுகளுக்கும் உரிமை உள்ளது என்றால் சரிதான்.**

2. நான் ரத்தினத்தையும் சேர்த்து வாரிசாக விளம்புகை செய்யக் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் எந்த தேதியில் மனு கொடுத்தேன் என்றால் என் சகோதரர் சுப்பிரமணி தான் மனுகொடுத்தார், தேதி நினைவில் இல்லை. மேற்படி மனுவின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி மனு எதற்காக நிராகரிப்பு செய்யப்பட்டது என்றால் அவருக்கு இரண்டு மனைவிகள் இருப்பதால் மனு நிராகரிக்கப்ட்டது. மனுவில் உள்ள இறந்த தேதியும், இறப்பு சான்றிதழில் உள்ள இறப்பு தேதியும் வெவ்வேறாக உள்ளது என்று நான் மனுவில் குறிப்பிட்டு இருந்தேன் என்றும், ஆனால் அதனை நான் சரி செய்து மீண்டும் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல மீண்டும் சரி செய்து சமர்ப்பித்தேன். என் தகப்பனாரின் முதல் மனைவியின் பெயர் என்ன என்றால் என் தகப்பனாருக்கு என் தாயார் மீனாட்சி மட்டும் தான் ஒரே மனைவி ஆவார்.

3. கிராம நிர்வாக அலுவலர் தனது விசாரணையில் இறந்தவருக்கு இரண்டு மனைவிகள் இருப்பதாக தெரிய வந்ததாக தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றும், அதில் ஒருவரை மறைத்து விட்டு நான் வாரிசு சான்றிதழ் கேட்டு உள்ளதால் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு

கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் 2ம் பிரதிவாதியிடம் கொடுத்த மனுவில் முறையான ஆவணங்களை கொடுக்காததால் மேற்படி மனு நிராகரிக்கப்பட்டது என்றும், அதனை சரி செய்ய முயற்சிகள் எடுக்காமல் நேரடியாக நீதிமன்றத்தை அணுகியது தவறு என்று சொன்னால் சரியல்ல. இறந்த ரத்தினத்தின் வாரிசுகளையும் சேர்த்து நான் வழக்கு தாக்கல் செய்யாததால் தாவா வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றும், அதனால் தாவா வழக்கு பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை : </u> இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.01.29 12:12:39 +0530